**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை–600 006.**

**ந.க.எண். 682/வி1/இ1/2019, நாள். 26 .06.2019.**

*****

**பொருள்:** பள்ளிக்கல்வி – தொழிற்கல்வி – அரசு /அரசு உதவிபெறும்/நகராட்சி மற்றும் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பயிற்றுநர்கள் மற்றும் தொழிற்கல்வி வேளாண் பயிற்றுநர்கள் பணியிடங்களில் **31.05.2019** அன்றைய நிலவரப்படி காலிப்பணியிடம் கோருதல் – சார்பு.

*****

அனைத்து அரசு /அரசு உதவிபெறும் / நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்விப் ஆசிரியர்கள் மற்றும் தொழிற்கல்வி வேளாண் பயிற்றுநர்கள் பணியிடங்களில் **31.05.2019** அன்றைய நிலவரப்படி இறப்பு/பணிஓய்வு மூலம் ஏற்பட்ட காலிப்பணியிடங்களை இதுவரை இயக்குநரின் பொது தொகுப்பிற்கு கொண்டு வரப்படாத பணியிடங்களை கண்டறிந்து அவற்றை இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு கொண்டு வரவேண்டியுள்ளது.

அரசு உதவி பெறும் பள்ளியில் ஏற்பட்டுள்ள தொழிற்கல்வி ஆசிரியர் மற்றும் வேளாண் பயிற்றுநர் காலியாக உள்ள பணியிடங்களை சம்மந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்திற்கு காலியாக உள்ள பணியிடங்கள் இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு கொண்டு செல்லப்படவுள்ளது என அறிவிக்கை அளித்து அவர்களிடமிருந்து பணியிட விவரங்கள் பெற்று பின்னர் உதவி பெறும் பள்ளிகளில் உள்ள பணியிடம் உட்பட அரசு / நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள காலிப் பணியிடங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து தொகுத்து இரு நகல்களில் 05.07.2019 அன்று இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களிடம் நேரில் சமர்ப்பிக்க அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

/இது மிக மிக அவசரம்/

இணைப்பு – படிவம்

ஒம்/–ச.சுகன்யா
இணை இயக்குநர்(தொழிற்கல்வி)

பெறுநர் :  அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**தொழிற்கல்விப் ஆசிரியர்கள் மற்றும் தொழிற்கல்வி வேளாண் பயிற்றுநர்கள் பணியிடங்கள் இதுவரை இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு கொண்டு வராத பணியிடங்களை சரண் செய்தல்**

**<u>படிவம்</u>**

**மாவட்டம் :**

| **வ.எண்** | **பள்ளியின் பெயர்** | **தொழிற்கல்வி பாடப்பிரிவு** | **எந்த தேதி முதல் காலியாக உள்ளது** | **காலிப்பணியிடம் ஏற்படக் காரணம்** |
|---|---|---|---|---|
| | | | | |

**<u>சான்று</u>**

.............................. மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு, நகராட்சி, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலி ஏற்பட்டுள்ள தொழிற்கல்விப் ஆசிரியர்கள் மற்றும் தொழிற்கல்வி வேளாண் பயிற்றுநர்கள் மேற்குறித்துள்ள பணியிடங்களைத் தவிர இதுவரை இயக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்ய வேண்டிய பணியிடங்கள் ஏதுமில்லை என இதன் மூலம் உறுதியளிக்கிறேன். தவறான தகவல் ஏதேனும் அளிக்கப்பட்டிருப்பின் அவற்றிற்கான முழுப் பொறுப்பும் முதன்மைக் கல்வி அலுவலரையே சாரும் என உறுதியளிக்கிறேன்.

முதன்மைக்கல்வி அலுவலர்
கையொப்பம்